Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 06 விலை ரூபா: 3·50

# ஈழநாதம்

THE EELANAATHAM *Peoples Daily* மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஹூ புரட்டாதி மீ 08 உ திங்கட்கிழமை (24-09-1990) ஹிஜ்ரி 1411 ரபி. அப். 04 ஓசை 218

## தண்ணீர் விடயத்தில் ராணுவத்தினர் கவனம்

(வவுனியா)

வவுனியா நகரப் பகுதியில் காவல் அரண்கள் அமைத்துகாவலில ஈடுபடும் இராணுவத்தினர் தண்ணீர் விஷயத்தில் மிகவும் எச்சரிக்கையாக இருப்பதாக அறியப்படுகிறது.

இந்த இராணுவத்தினர் அருகில் உள்ள தமிழ் மக்களின் கிணறுகளிலேயே தண்ணீர் எடுத்துப் பருகுவதாகவும், இதனால் கிணறுகளைக்கூட காவல் காத்து வருகின்றனர் என்றும்அறியப்படுகிறது. (6-ம்பக்.பார்.)

# புலிகளின் அதிரடித் தாக்குதல்

# 10படை பலி; ஆயுதங்கள் மீட்பு

(மட்டக்களப்பு)

*மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒருமுகாமில் இருந்து மற்றொரு முகாமுக்குச் சென்ற சிறிலங்கா இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் பத்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இராணுவத்தினர் பயணம் செய்த வாகனம் முற்றாகச் சேதமடைந்தது. இராணுவத்தினரிடம் இருந்து பல ரக ஆயுதங்களும், தொலைத்தொடர்புச் சாதனமும் கைப்பற்றப்பட்டன.*

இச் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது: நேற்று முன் தினமிரவு 8 45 மணியளவில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்கபுர இராணுவ முகாமில் இருந்து கண்டாக்காட்டு இராணுவ முகாமுக்குச் சென்று கொண்டிருந்த இராணுவ ட்ரக்கை விடுதலைப் புலிகள் வழிமறித்துத் தாக்கியபோதே பத்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ட்ரக் முற்றாகச் சேதமடைந்தது.

### கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

இத் தாக்குதல் சம்பவத்தில் இராணுவத்தினரிடம் இருந்து புலிகளால் நவீன ஆயுதங்களும், தொலைத் தொடர்புச் சாதனமும் கைப்பற்றப்பட்டன. அவ்வாறு கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

எல். எம். ஜி. (ஆர். பி. டி) ரவைக் கூடு இரண்டு, 3, ரி. 56 ரக துப்பாக்கி. 6, ரி. 81 ரக துப்பாக்கி, 31 ரவைக் கூடு. 489 ரவைகள். 1 தொலைத் தொடர்புச் சாதனம்.

### கோட்டையில் ஒரு படை பலி

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் நேற்று முன் தினம் நடாத்திய தாக்குதலில், கோட்டை இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவ வீரர் ஒருவர் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சின் அறிக்கை தெரிவிக்கின்றது.

### ஷெல்தாக்கு

(யாழ்ப்பாணம்)

நேற்று பகல் முழுவதும் யாழ். நகரை நோக்கி பாரிய ஷெல் தாக்குதலை மண்டைதீவு பகுதியில் உள்ள சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்டனர்.

இத்தாக்குதலில் நகரின் பல பகுதிகளும் அதிர்ந்தன.

### மூவர் கொலை

(கொழும்பு)

பொலநறுவ மாவட்டத்திலுள்ள வெலிஓயாப் பகுதியில் மூன்று சிங்களக் குடிமக்கள் கொல்லப்பட்டதாக இலங்கை அரசை மேற்கோள்காட்டி இந்திய வானொலி அறிவித்துள்ளது.

### வீரவணக்கம்

நேற்று முன்தினம் 22.09.90 மாலை மண்டைதீவு இராணுவ முகாமிலிருந்து யாழ் கோட்டைப்பகுதியை நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலின் போது கோட்டைப் பகுதியில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த லெப்டினன்ட் சுமன் (ஆனந்) சுதர்சன் (ஆறுமுகம்-ஆனந்தராஜா கல்லூரிவீதி, இளவாலை) ஆகியோர் வீரமரணமடைந்தனர். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

### வீரவணக்கம்

(யாழ்ப்பாணம்)

கடந்த வெள்ளிக்கிழமை வசாவிளானில் ஷெல் தாக்குதலினால் காயமடைந்த போராளி மொசாட் (ம. ஜெயகாந்தன்) நேற்று வீரமரணத்தைத் தழுவிக்கொண்டார். முல்லைத்தீவு புதுக்குடியிரு (6 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றைய குண்டு வீச்சினால் பலர் காயம்; வீடுகள் சேதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர் மீது நேற்று மாலை சிறிலங்கா விமானப் படையின் பொம்மர் விமானங்கள் பாரிய தாக்குதல் நடத்தியதில் பலர் காயம் அடைந்துள்ளனர். பலவீடுகள் பலத்த சேதமடைந்தன.

மாலை 4-00 மணியளவில் நகரின் வான் பிரதேசத்தில் பிரவேசித்த பொம்மர் விமானங்கள் ஓட்டுமடம் பகுதியில் நடத்தியதாக்குதலில் இரண்டு வீடுகள் பலத்த சேதமடைந் (6 ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவ் - ஜே. ஆர். ஒப்பந்தப்படியே இனப்பிரச்சினைக்குத் தீர்வு

-குஜ்ரால்

ஒன்றுபட்ட இலங்கைக்குள் ராஜீவ் - ஜே. ஆர். உடன்படிக்கையின் அடிப்படையிலேயே இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு காணப்படவேண்டும் என இந்திய வெளியுறவு அமைச்சர் ஐ கே.குஜ்ரால் நேற்று முன்தினம் செய்தியாளர் மாநாட்டில்தெரிவித்துள்ளார்

மேலும் கருத்து வெளியிட்ட குஜ்ரால் இலங்கைக்குத் தாம் மேற்கொள்ளவுள்ள பயணத்தின்போது இருநாட்டு உறவுகள் சம்பந்தமான சகல அம்சங்கள் குறித்தும் விவாதிக்கப்பட உள்ளதாகத் தெரிவித்தார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரியில் ஆதாரச்சம்பளம் வழங்க முடியாத நிலை

(பூநகரி)

பூநகரி தபால் அதிபர் பிரிவில் சுமார் நூற்றி ஐம்பது குடும்பங்களுக்கு ஆகஸ்ட்மாத ஆதாரச் சம்பளம் வழங்கமுடியாத நிலையிலுள்ளனர். இதனால் இக்குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பட்டினியின் விளிம்பில் நிற்கின்றனர்.

இதற்குத் தேவையான சுமார் ஐம்பதாயிரம் ரூபாவை இதுவரை காலமும் பூநகரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் வழங்கி வந்தது. தற்போது இச்சங்கத்தில் பணம் கையிருப்பு இன்மையால் தொடர்ந்து பணம் வழங்க முடியாத நிலையில் சங்கம் உள்ளது.

## சிறிலங்கா இராணுவத்தினர் 150 பேர் இந்தியாவில் பயிற்சி

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தைச் சேர்ந்த 150 போ இந்தியாவில் பயிற்சி பெற்று வருவதாகவும் இவர்களில் 50 பேர் அதிகாரிகள் தரத்தினைச் சேர்ந்தவர்கள் எனவும் இராணுவத் தளபதி ஹமில்ட்டன் வணசிங்க ''ஒப்சேர்வருக்கு'' வழங்கிய பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

## பூந்தோட்டச் சந்தையை மூட இராணுவம் முயற்சி

(வவுனியா)

பூந்தோட்டத்தில் அமைந்துள்ள பொதுச்சந்தை மூடப்படவேண்டும் அல்லாவிட்டால் இராணுவத்தின் தாக்குதல் நடவடிக்கைகளுக்குப் பொது மக்கள் பாதிக்க நேரிடும்என்று வன்னிப் பகுதி இராணுவ தலைமையகத்தின பிரிகேடியர் சத்தீஸ் ஜயசுந்தரஅறிவித்துள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர் பிரஜைகள்குழு, வர்த்தகர் குழு உறுப்பினர்கள் இவரைச் சந்தித்து பேசியபோது பிரிகேடியரால் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவையின் செயற்பாடுகள் தமிழீழமக்களுக்கு ஏமாற்றம்தருகிறது

### விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி அறிக்கை

தமிழீழ சிறிலங்காப்போர் ஆரம்பித்து மூன்று மாதங்கள் ஆகிவிட்டன. இந்த மூன்று மாதங்களிலும் தமிழீழப்பகுதியில் செயலாற்றிய சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் செயற்பாடுகள் தமிழீழ மக்களைப் பெரும் ஏமாற்றத்திற்குஉள்ளாக்கியுள்ளது என விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைமைச் செயலகம் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

மேலும் அவ்வறிக்கையில் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் அபிப்பிராயங்களை தாம் தெரிவிப்பது இல்லை எனக் கூறிவருகின்றனர். இதை சிறிலங்கா பயன்படுத்திக்கொண்டு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை தனது பொய்ப்பிரசாரத்திற்கு கேடயமாக பயன்படுத்துகின்றது. இதுதான் எமது மக்களுக்கு வேதனையைத்தருகிறது.

*சிறிலங்காஎல்லோரையும் ஏமாற்றுகிறது*

சிறிலங்கா கடந்த காலங்களில் தமிழ் மக்களை ஏமாற் (6 ஆம பக்கம் பார்க்க)

## எரிபொருள் தட்டுப்பாட்டால் விவசாயத்தில்ஆர்வமின்மை

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் எரிபொருட்களின் தட்டுப்பாடு காரணமாகவும், இவற்றின் விலை ஏற்றம் காரணமாகவும் காலபோக நெல், மற்றும் பயிர்ச் செய்கைகளில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## திலீபனின் நினைவாக



நீ -
நீர் கூட அருந்தாது
நோன்பிருந்தாய்...
எங்கள் கண்களில்
நீர் பொழிந்ததே... ஏன்?

களத்தில் உதிரம் சிந்தியவன்
நீ
நல்லை நகர் வீதியிலே
உருகிக் கிடந்தாயே... ஏன்?

மரணித்து -
நீ மட்டுமே...
'மனிதம்' மரணித்து விட்டது
என்றார்களே... ஏன்...?

உனக்கிருந்தது
தாயக தாகமே...
உன்னுள் எரிந்தது
விடுதலை தீபமே...
நீயா இறந்தது?
காந்தியம் அல்லவோ...

துன்னாலை வடக்கு
புலோலி (மந்திகை)
புலோலி தெற்கு
புலோலி தென்மேற்கு

சிற்றூரவைகள்.

(B/1399)

## தியாக தீபம்
## திலீபனுக்கு
## எமது இதய அஞ்சலிகள்



பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ.
சங்கம், பளை.

(R/651)

## வரிவிளம்பரம்

### இடம் மாற்றம்

இராசா டீசல் என்ஜினியர்ஸ், 180, பருத்தித்துறை வீதியிலிருந்து தற்காலிகமாக 28/3, மனல்தறை லேன், கந்தர்மடம் யாழ்ப்பாணத்திற்கு இடம் மாற்றப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். (R-630)

பிக்பென்ஸ் - B, கண்டி றோட், கிளிநொச்சி என்ற விலாசத்தில் இயங்கி வந்த ஸ்தாபனம் தற்காலிகமாக அருகிலுள்ள ஸ்தாபனத்தில் இயங்குகிறது. வாடிக்கையாளர்கள் கூடிய விரைவில் தங்கள் கடிகாரங்களைப் பெற்றுச் செல்லுமாறு கேட்கப்படுகின்றனர். வழமைபோல் மணிக்கூடுகள் திருத்த வேலைகளும், மணிக்கூட்டு பற்றிகள், பாடசாலை உபகரணங்கள் என்பன பெற்றுக் கொள்ளலாம். (R-633)

### விற்பனைக்கு

இப்பில் இப்பில் விதைபெற விரும்புவோர் ரூ 2.00 அஞ்சல் முத்திரை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். மில்க்வைற், யாழ்ப்பாணம். (B-1412)

### ஒன்று கூடல்

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஆசிரியர்களுக்கான போக்குவரத்து தொடர்பான ஒன்று கூடல் இன்று திங்கட்கிழமை காலை 10 மணியளவில் யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது. மேற்படி அறிவித்தலை ஆங்கில ஆசிரியர் ச. முருகதாஸ் வெளியிட்டுள்ளார்.

### அரைப்பங்கு பொருள்கள் விநியோகம்

(ஈச்சமோட்டை)

தற்போது யாழ்ப்பாணத்தில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விநியோகிக்கப்பட்டுவரும் இடம்பெயர்ந்தோர்களுக்கான இலவச உணவுப்பொருட்களில்அரைப்பங்கு பணத்தின்பெறமதியுள்ளபொருட்களே வழங்கப்படுகின்றன. இவ்வாறு பொருட்களை வாங்குவோர் அவற்றுக்கான பற்றுச்சீட்டுக்களைக் கவனமாக வைத்திருந்து பின்னர் மிகுதிப்பணத்துக்கான பொருட்களைப் பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (43)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
05
09
1955

உதிர்வு
24
08
1990

### திருமதி மதியாபரணம் பத்மாஜனி
(சந்திரிகா)

யாழ்நகரில் மிளிருமுயர் கொட்டடிசேர் கண்ணபுரம்
யாண்டுமுயர் புகழோங்க
யாவருமே போற்றுகின்ற கனகரத்னம் இராசம்மா
ஈன்றமகள் பத்மாஜனி
ஊழ்வினையால் நல்லபர மேஸ்வரியை முன்மணந்த
உயர்மதியா பரணனையே
உவப்புடன்பின் மணஞ்செய்து பிள்ளைகளைவரையுமீன்று
உளமகிழ வாழ்ந்தநின்னை,
பாழ்செய்யும் அரசபடை விடுத்தவொரு 'ஷெல்' வீழ்ந்து
பிரியன்பிள் ளைகளேங்க,
பாங்கிலுள ஊரவரும் உற்றாரும் பரிதவிக்க
பாவையுன்றன் ஆவிநீத்தாய்;
ஆழ்ந்ததுயர் அனைவரையும் அரவணைத்து அலறவைக்க
அஞ்சலியைச் சமர்ப்பித்தோம்
அகிலேசன் பதம்புக்க அம்மாநின் ஆத்மாவும்
அடைகநிதம் சாந்தி! சாந்தி!!

சொ. மதியாபரணம்,
12, கண்ணபுரம்,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

கணவன், பிள்ளைகள்,
தாயார். சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்.

(B/1410)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தாயின் அன்பிற்காய் தாயக விடிவிற்காய்
1962-03-15 1990-08-24

முன்னாள் வடமராட்சி கிழக்குப் பொறுப்பாளர்

### ராஜீவ்
### ந. திருஞானமூர்த்தி
(வத்திராயன் வடக்கு)
(சகல போராளிகளுக்கும்)


சொந்தங்கள் பந்தங்கள் அனைத்தையும் எதிர்த்து
சொந்த மண்ணிற்காய் சுயநலத்தை துறந்து
வெந்த மண்ணின் விடிவிற்காய் அன்று
வந்த மறவர் படையில் சென்று
புகுந்து எட்டாண்டு களத்தில் நின்று
இந்த மண்ணில் எதிர்த்தாய் நன்று
வத்திநகரில் வீரஜனனம் மண்டைதீவில் வீரமரணம்
எத்துணை வேகம்தான் உன்னுடைய வீரம்
அத்துணை போக உன்பின் நாமும் விரைவோம்

உன்பிரிவால் வாடும்
தாய், சகோதரர்கள், சகோதரிகள்,
உற்றார், உறவினர்கள், நண்பர்கள்

வத்திராயன் வடக்கு,
வடமராட்சி கிழக்கு

(R/649)

## திலீபனின் மூன்றாண்டு நினைவாக....



வளமான வாழ்வை விட்டு
வாலிபத்தின் நோக்கை விட்டு
திடமான தமிழ் மண்ணை
உருவாக்க உயிர்நீத்த
உத்தமன் திலீபனுக்கு
பலமாக நின்றுழைப்போம்!
பலபேரும் தமிழ் மண்ணில்
திலீபனின் தியாகச் சுடர்
ஈழ மண்ணில் மலரட்டும்!

மானிப்பாய் கோவில்பற்று ப. நோ. கூ. சங்கம்
மானிப்பாய்.

(B· 1316)

# திட்டமிட்ட அடக்குமுறையை அம்பலப்படுத்திய தியாகி திலீபன்

1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29ஆம் திகதி சிறிலங்கா அரசின் அன்றைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவினாலும் அன்றைய இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியாலும் இலங்கை இனப்பிரச்சினை சம்பந்தமான வரலாற்றுப்புகழ் மிக்கதென புழுகப்பட்ட உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது.

இந்த உடன்படிக்கையானது உச்சநிலைக்கு சென்றுவிட்ட தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தினை திடீரென ஒரு பின்னடைவு நிலைக்குத் தள்ளியது.

ஆகவே இந்த உடன்படிக்கையை தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றிவைக்கப்பட வேண்டும் என விரும்பிய இந்த உலகின் ஒவ்வொரு பிரஜையாலும் நிராகரிக்கப்பட்டு வந்தது.

அப்படி இருந்தபோதிலும் முதன்முதலாக நேரடியாக இந்தியா தமிழீழத்தில் ஆயுதப் போராட்டம் ஆரம்பித்ததன் பின்பு எமது பிரச்சினையில் தலையிட்டு மத்தியஸ்தம் செய்கிறது. தமிழ்நாட்டில் உள்ள ஆறுகோடி மக்களும் இந்தியாவின் தலையீட்டால் நடைபெறும் மத்தியஸ்த முயற்சிகளை கவனித்து வருவதால் அம்மக்களுக்கு மதிப்பளிக்க வேண்டியமைபோன்ற செயல்முறைக்கு அப்பாற்பட்ட சக்தி உந்துதலால் இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டி ஏற்பட்டது.

**மீறல்கள்**

தன்னிச்சையாக இரு அரசுகளும் செய்துகொண்ட ஒப்பந்தமானது அதிலுள்ள அம்சங்களின் பிரகாரம் அமுல்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் இலங்கை அரசின் திட்டமிட்ட சதிக்கு இந்திய அரசு ஒத்துப்போக ஆரம்பித்தது.

★ பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் சந்தேகத்தின் பேரில்கைதுசெய்து சிறிலங்கா கூலிப்படைகளின் சிறைக் கூடங்களில் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டுவந்த தமிழ் மக்கள் எவரும் ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஒன்றரைமாதமாகிவிட்ட போதிலும் விடுவிக்கப்படவில்லை.

★ அவசர காலச்சட்டம் உடன் நீக்சப்படும் மேலும் வடக்கு கிழக்கு இணைந்த இடைக்கால 'அரசு ஸ்தாபிக்கப்படும் என அந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டிருந்தது. ஆனால் அதுவும் காலந்தாழ்த்தப்பட்டு சாக்குப் போக்குகள் காட்டப்பட்டு வந்தது.

★ தமிழ் இனம் ஒரு தேசிய இனம். அதன் பாரம்பரிய பிரதேசமான இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணம் இணைக்கப்பட்டு அதற்கென கலை கலாசாரங்களைக் கொண்ட சிங்கள நாட்டிலிருந்து வேறுபட்ட சிறப்பம்சம் பொருந்திய பகுதியாக ஏற்றுக்கொள்வதாக ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. — ஆனால் தமிழ்த் தேசிய இனத்தின் தேசியத் தன்மையை கூறுகளாக்கி உருக்குலைக்கும் நோக்குடன் பல புதிய குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

★ அரசின் இந்த சதித்திட்டத்திற்கு இசைவாக வடக்கு கிழக்கிலிருந்து வெளியேறிய மக்களை மீளக் குடியமர்த்தி அவர்களுக்கு புனர்வாழ்வு அளித்தல் என்ற கூற்று துணை நிற்பதாகிறது.

★ இவை அனைத்தும் போக குடியேற்றப்பட்ட சிங்கள காடையர்களுக்கு ஆயுதப் பயிற்சியும் ஆயுதங்களும் வழங்கியதுடன் இந்தக் குடும்பங்களுக்கு 'ஊர்காவற்படை' என்ற பெயரும் இடப்பட்டது. மேலும் வடக்கு கிழக்கில் உள்ள பல தமிழ் பாடசாலைகளிலும் பொதுவிடங்களிலும் புதிய பொலிஸ் இராணுவ நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

**திலீபனின் போராட்டம் ஆரம்பம்**

தனது பிராந்திய நலனுக்குள் சிறிலங்கா பணித்துவிட்டது என்ற போலி வெற்றிக்களிப்பில் இந்தியா இருந்து வந்தது. ஈழத்தமிழ் மக்களின் முடிவற்ற போராட்டத்திற்கு ஒரு நிரந்தரமான அமைதித்தீர்வு காணுவதுபற்றி சிந்தித்ததாக தெரியவில்லை. சிறிலங்கா அரசோ தமிழீழ மக்கள் எத்தனையோ ஆயிரம் உயிர்களைப்பலி கொடுத்து வெற்றிப்பாதையில் கொண்டு செல்லப்பட்டவிடுதலைப்போராட்டத்தினை சிதைத்துவிட ஆன முயற்சிகள் அனைத்தும் செய்துவந்தது. இதற்கு பதவி மோகம்கொண்ட துரோகக் கும்பல்களையும் பயன்படுத்தியது இந்திய இராணுவம். ஆயுதங்களை களைந்துவிடுவதில் இருந்த வேகத்தை ஒப்பந்த அமுலாக்கலில் காட்டவில்லை.



எனவே இவை அனைத்தையும் உலகுக்கு சுட்டிக்காட்டியும் ஒப்பந்த அமுலாக்கலை துரிதப்படுத வேண்டியும் விடுதலைப்புலிகளின் அரசியல் பொறுப்பாளர் திலீபன் தமது முதற்கட்ட அதி உச்ச அகிம்சைப் போராட்டமான சாகும் வரையிலான உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்.

**இந்தியாவின் எதிர்பாராத வியப்பு**

விடுதலைப்புலிகளிடம் இருந்து ஆயுதங்களை களைந்தும் தேசிய விடுதலைப் போராட்ட நடவடிக்கைகளை மிக விரைவில்நசுக்கிவிடலாம், இந்த போராட்டத்தினை இன்னும் ஓர் சந்ததி வரை பின்னடைய செய்வதன் மூலம் இலங்கை அரசு எதிர்காலத்தில். பிராந்திய நலனுக்கு எதிரான போக்கினை கடைப்பிடிக்கும் நிலையில் மீண்டும் ஈழ விடுதலைப் போரை இலங்கை அரசுக்கு எதிராக பாவிக்கமுடியும் என எண்ணியிருந்த இந்தியா திலீபனின் புதிய அகிம்சை ஆயுதத்தை கண்டு எதிர்பாராத வியப்படைந்தன.

திலீபன் தனது விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்த நாள் தொட்டே எதிர்பாராத வெகுஜன ஆதரவு திரள ஆரம்பித்தது. இதனை இந்திய அரசசோ, அல்லது அதன் உளவு நிறுவனங்களோ எதிர்பார்க்கவில்லை. இதனால் உண்ணாவிரதப் போரை பலவீனப்படுத்திவிட வேண்டும் மக்கள் ஆதரவை சிதைவடைய செய்ய வேண்டும் என இந்திய அரசு அதன் உளவு நிறுவனங்களும் துடியாய் துடித்தன.

**மாபெரும் மக்கள் எழுச்சி**

திலீபனின் உடல் நிலை நாளுக்கு நாள் மோசமடைய ஆரம்பித்ததுதமிழீழ மக்களின் ஆதரவும் நாளுக்கு நாள் எழுச்சி அடைய ஆரம்பித்தது. ஆரம்பத்தில் தமிழீழ மக்கள் கூட சிறிலங்கா அரசினதும், இந்திய உளவு நிறுவனங்களினதும், நடவடிக்கைகளை இந்திய மத்திய அரசின் கவனத்துக்கு கொண்டு வருவதற்காகவே இந்த போராட்டம் நடைபெறுவதாக எண்ணினர் நாளுக்கு நாள் திலீபனின் உடல்நிலை மோசமடைய ஆரம்பித்தது ஆனால் இந்தியா பாராமுகமாக இருந்து வருவதை அவதானித்து வந்தனர். அணி அணியாய் திலீபன் உண்ணாவிரதமிருந்த நல்லூர் கந்தசுவாமி கோவில் வீதிகளில் அலைமோதி இந்திய எதிர்ப்பு கோஷங்களை எழுப்ப ஆரம்பித்தனர். பல இடங்களில் மறியல் போராட்டங்கள் செய்தனர்.

**செய்தித்தொடர்புஊடகங்களை பாவித்தது இந்தியா**

இந்தநிலையில் மக்கள்எழுச்சியைசிதைவடைய செய்யும் முகமாக இந்திய வெகுஜன செய்தி தொடர்பு சாதனங்களை திட்டமிட்டுசெயலாற்ற ஆரம்பித்தன.

இலங்கையில் சமாதான பணியில் உள்ள இந்திய அமைதி இராணுவத்தின் பொழுது போக்கிற்கு என கூறிக் கொண்டு 'அன்பு வழி' 'நேசக்கரம்' 'வெற்றிமாலை' என ஒரு நாளுக்கு மூன்று வேளை நிகழ்ச்சிகளை தயாரித்து மக்கள் விடுதலையை நோக்காக கொண்ட இந்த சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை விடுதலைப்புலிகளின்உண்ணாவிரதம்' என குறுக்கிவிட முனைந்தன, மேலும் கொச்சைப்படுத்தின. பகீரதப்பிரயத்தனம் செய்தன.

**வாக்குறுதிகளை நம்ப வேண்டாம் - திலீபன்**

திலீபனின் உண்ணாவிரதத்தை தொடர்ந்து தமிழீழத்தில் எழுந்துள்ள கொந்தளிப்பு நிலையை கண்டு இந்தியா அதை கட்டுக்குள் கொண்டுவந்து விடவேண்டும் என்ற எண்ணத்தில் அன்றைய இந்தியத்தூதர் ஜே. என் டிக்ஸிற் திலீபனின் உண்ணாவிரதத்தை கைவிடுங்கள் நாம் ஒப்பந்தத்தில் எழுந்துள்ள சிக்கல்களை தீர்க்க முயற்சிக்கிறோம் என வெறும் வாக்குறுதிகளை கூறினார். ஆனால் ஏற்கனவே இந்தியாவினால் அளிக்கப்பட்ட உறுதிமொழிகளை சரியாக கடைப்பிடிக்காததால்தான் இந்தப் போராட்டத்தை நடத்துவதாக குறிப்பிட்டு வெறும் உறுதிமொழிகளை நம்பி தாம் உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிடக் கூடாது என திலீபன் வேண்டுகோள் விடுத்திருந்தார். இதனால் வாக்குறுதிகள் மூலம் நசுக்கி விடலாம் என்ற இந்தியாவின் தந்திர முயற்சிகள் திலீபனிடம் தோற்றுப் போய்விட்டன.

**தமிழ்நாட்டில் இருட்டடிப்பு**

திலீபனின் அஹிம்சைப் போராட்டம் தமிழகமாநிலத்தில் பலவழிகளிலும் தாக்கம் விளைவிக்க ஆரம்பித்தது. இதனை தன்னால் இயன்ற வரைக்கும் தமிழ் நாட்டில் இந்திய வெகுஜன தொடர்பு சாதனங்கள் இருட்டடிப்பு செய்தன.

இருந்தும் ஏற்கனவே இலங்கை இனப்பிரச்சனை சம்பந்தமாக இந்திய அரசு இலங்கைஅரசுடன் இணைந்து ஈழத்தமிழரின் முதுகில் குத்திவிட்டதாக அறிவித்து தமிழ் நாட்டின் முன்னணிக் கட்சிகள் பலஇணைந்துஇந்தியஇலங்கை ஒப்பந்த நகல்களை நடுவீதியில் வைத்து தீயிட்டு எரித்து அதன் சாம்பரை டில்லியில் உள்ள இந்திய மத்திய அரசுக்கு அனுப்பி வைத்திருந்தன. ஆகவே திலீபனின் உண்ணாவிரதப் போராட்டமும் தமிழ் நாட்டிற்கு எட்டுமிடத்து பிராந்திய நலனை மட்டும் தீர்க்கும்ஒப்பந்தத்தை அமுலாக்குவது மிக கடினமாகிவிடும் என்பதை இந்திய மத்திய அரசு ஏற்கனவே உணர்ந்திருந்தது.

இந்திய மாநிலங்கள் இடையேயும் குறிப்பாக தமிழ் நாட்டில் திலீபனின் உண்ணாவிரதம் வெகுஜன கொந்தளிப்பை ஏற்படுத்தினால் மத்திய அரசின் அதிகாரத்திலிருந்த இந்திரா காங்கிரஸின் பதவிக்கு ஆபத்து வரும். இது தவிர வெளியுலகில்இந்தப் போராட்டம் வெளிப்படுமிடத்து உலக நாடுகளுக்கு ஒரு சாதுவான மிருகமாக தென்படும். இந்தியாவின் மீது ஐயங்கள் எழும். இதனால், தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இந்தியா அழுத்தங்களை பிரயோகிப்பது வெளிப்படும். இதனால் இந்தியாவின் ஆக்கிரமிப்பு தன்மை வெளிப்படுவதை மறைக்க முடியாது போய்விடும் என்பதை ராஜீவ் அரசு நன்குணர்ந்திருந்தது.

**இராணுவத்தின் முதல் தோல்வி**

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதும் 'பட்டாலியன்' களாக வந்திறங்கிய இந்திய இராணுவம் உலகின் நான்காவது பலம் பொருந்திய படை திலீபன் தொடுத்த இந்த பாரிய தாக்குதலால் செய்வதறியாது கைகட்டி நின்று பார்க்க வேண்டிய நிலைக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அஹிம்சையின் துலங்கல்

விமானங்களினின்றும் அறிவித்து
அமுல் நடத்த முற்படும்
ஊரடங்கையும் மீறி
மக்கள் நடமாடுகின்றனர்

சுற்றித் திரியும் போர் விமானங்களும்
கலிபர்கள் பொருத்திய
ஹெலிகப்டர்களும்
மனிதவேட்டை நடத்த அலைந்தபடி

இந்த நிகழ்வுகளினூடேயும்
நாங்கள் சுருங்கிவிடவில்லை

இது நாவல் மரங்கள்
பழுக்கும் காலம்

இந்த நாளினில்
உன்னை நினைவு கொள்கிறோம்
திலீபனே!

இனவழிப்பிற்கும் ஒடுக்குதலுக்கெதிராகவும்
இணைந்து போராடினோம்
இன்னொரு பாதம்
எங்களை மிதித்தது இந்திய ஆக்கிரமிப்பாய்
அந்த நாட்களில்
எங்களின் இரத்தம் சிந்திய மண்ணில்
உயிரை
உருக்கி வார்த்தவன்
நீயொரு இனத்தின் முதுகினில்
ஏறிய கால்களை எரித்திட
உன்னை நெய்யாய் சிந்தினை

இன்றுன் முகமில்லை
நினைவுகளுண்டு
உயிரில்லை
உணர்வுகளுண்டு

என்னுடைய தாய்நாட்டின்
உயிர்ப்பாடலில் நீயுண்டு

பந்தரிட்டோம்
வீதிகளில், தோரணங்களின் முடிவிலாத்தூரம்
போர்ப்பாடலின் ஒலிப்பு
இது சடங்கல்ல
விழாவுமல்ல
உனது சத்திய நாட்கள்

எம்முடைய தாய் நாட்டின்
உயிர்ப்பாடலில் நீயுண்டு
ஒடுக்குதலுக்கெதிராகவும்
இன அழிப்பிற்கும்
ஆக்கிரமிப்பிற்கெதிராகவும்
நாங்கள் போராடுகிறோம்.

— எஸ். கருணாகரன்

# திலீபனின்

## 3 ஆம் ஆண்டு நினைவாக



### விண்ணில் உதித்த தெய்வ மகன்

விண்ணில் உதித்தான் தெய்வமகன்
பார்த்திபன் என்றொரு வீரமகன்
ஈழவர் மனங்களில் நிறைந்தமகன்
தியாகம் புரிந்த திலீப மகான்

ஈழத்தாய் செய்ததவப் பயனாய்
ஈழத்தில் உதித்த திலீபமகான்
தருமம் நீதி பேசிநின்ற காந்தி
தேசத்தின் அறத்தை திருத்திய மகான்

ஈழநாட்டின் தெய்வ மகன்
இங்கொரு புரட்சி செய்தமகன்
தானைத் தலைவன் தமிழீழப் புதல்வன்
தரணி புகழ்பாடும் தமிழீழத் திலீபன்

**தும்பளை**
**தும்பளை கிழக்கு,**
**கற்கோவளம், வல்லிபுரம்**
**சிற்றூரவைகள்**

B/1398

# உண்ணாவிரதமும் மகஜர் கையளிப்பும்

(கொழும்புத்துறை)

ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர் ஸ்தானிகராலயத்தைச் சேர்ந்த அதிகாரிகளும், ஜெனிவா அதிகாரிகளும் நேரில் வந்து சிறிலங்கா இராணுவத்தினரின் போர்க்கால நடவடிக்கைகளால் அகதிகளாக்கப்பட்ட தமிழ் மக்களை நேரில்பார்ப்பதற்கு சிறிலங்கா அரசு "அனுமதி மறுத்துள்ளதைக் கண்டித்து தமிழ் மாநில அகதிகள் பாதுகாப்பு மன்றம் ஒருநாள் அடையாள உண்ணாவிரதம் அனுஷ்டிக்க முடிவு செய்துள்ளது.

இவ் உண்ணாவிரதம் எதிர்வரும் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை ஒன்பது மணி முதல் பிற்பகல் நான்கு மணி வரை பருத்தித்துறை மந்திகை அரசினர் வைத்தியசாலைமுன்பாக நடாத்தப்படும்.

உண்ணாவிரத முடிவில் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் இயங்கும் பிரான்ஸ் நாட்டு வைத்திய அதிகாரிகளிடம் மகஜர் ஒன்றுகையளிக்கப்படும் இந்த உண்ணாவிரதத்தில் சகல தமிழ் மக்களும் கலந்து கொள்ளும்படி இம்மன்ற அமைப்பாளர் திரு. சி. கஜேந்திரநாத் வேண்டுகோள் விடுத்துள்ளார். (24)

## திலீபன் நினைவாக தேர் இழுப்பு

(கொழும்புத்துறை)

தியாகதீபம், ஈழத்துக்காந்தி திலீபனின் உருவப்படம் வைக்சப்பட்டு அலங்கரிக்கப்பட்ட தேர், துண்டியில் இருந்து கொழும்புத்துறை வீதியாக நெடுங்குளம் வீதி, கண்டிவீதியால், நல்லூர் வீதிகளினூடாக நேற்றுக் காலை இழுத்துச் செல்லப்பட்டது.

நல்லூர் திலீபன் தூபியை நோக்கி தேர் சென்ற போது வழி எங்கிலும் மாலை அணிவித்து மக்கள் அஞ்சலி செய்தனர். (24)

## திட்டமிட்ட ..

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

தள்ளப்பட்டது. இதுவே புலிகளின் மன உறுதியிடம் அவர்கள் தோற்ற முதல் தோல்வியாகி விட்டது.

முறியடிக்கப்பட்டது

இந்தியா தன்னாலான மட்டும் இந்த போராட்டத்தை மறைக்க முற்பட்ட போதிலும் பல சர்வதேச சுயாதீன தொடர்பு சாதன நிருபர்களின் வடபகுதி விஜயம் மூலமும் தமிழ் நாட்டு காந்தி காமராஜர் கட்சி தலைவர் நெடுமாறன் போன்ற தமிழ் நாட்டு தலைவர்களின் வரவினாலும் இந்தியாவின் பிரயத்தனங்கள் பெருமளவில் முறியடிக்கப்பட்டன.

ஆகவே இன்று நாம் மூன்றாம் ஆண்டு நினைவு நாட்களை கண்டிருக்கும் திலீபனின் தியாகம் உலகின் சர்வ வல்லமை பொருந்தியதும், தெற்காசியாவின் முரட்டுக் காளையாகவும் திகழும் இந்தியாவை ஆட்டம் காண வைத்தது.

அன்றைய இந்திய அரசு எம்மை எமது நலன்களை முழுமையாக கருத்தில் கொண்டு ஒடுக்கு முறைக்கு உள்ளாக்கியது. திட்டமிட்ட இந்த ஒடுக்கு முறையை எதிர்த்து அதனை முழுமையாக தோல்வியுற செய்ய முடியாவிட்டாலும் கூட வெளியுலகிற்கு இந்தியாவின் அடக்கு முறைப் போக்கை அம்பலப்படுத்துவதில் மாபெரும் வெற்றி கண்டவர் விடுதலைப்புலிகளின் அரசியல் பொறுப்பாளர் இ. திலீபன் என்பது முற்றிலும் உண்மையே.

## 3 ஆம் ஆண்டு நினைவுநாள்



உண்ணா நோன்பு ஆரம்பம்: 15-09-1987

தியாக மரணம்: 26-09-1987

**தியாகி லெப். கேணல் திலீபன்**

**(இராசையா பார்த்திபன் — ஊரெழு)**

தியாக தீபமான திலீபனின் நோக்கங்கள், சிந்தனைகள், நினைவு கூர்ந்து அவனது அடி பின்பற்றி நாட்டின் சுதந்திரததுக்காய் எம்மை அர்ப்பணிப்போம்.

வலி - கிழக்கு (வ. ப)
ப. நோ. கூ. சங்கம்,
அச்சுவேலி
பணியாளர்களும்,
பணிப்பாளர்களும்.

(R-650)

# திலீபனின்

# மூன்றாவது ஆண்டு நினைவாக...



எமது மக்கள் பரிபூரணமாக எழுச்சி கொள்ள வேண்டும். இன்று கூட எம் மக்கள் மத்தியில் அந்த நிலை இல்லாதது எமக்கு வருத்தத்தைத் தருகிறது. எமக்கு ஆறாத சோகத்தை ஏற்படுத்துகிறது. அந்நிலைமை மாற்றி அமைக்கப்பட வேண்டும். எமது அடிப்படை உரிமைகள் பேணப்படவேண்டும் என்பதற்காக நாம் எழுச்சியடைய வேண்டும்.

இப்படி எழுச்சியுடன் நாம் போராடினால் எவரும் இப்போராட்டத்திற்கு மதிப்பளித்தேயாக வேண்டும். ஒன்றைக் கூறுகின்றேன்: மக்கள் அனைவரும் முழுமையாக போராட்டத்திற்கு தயாரானால் நிச்சயமாக தமிழீழத்தை அமைக்க முடியும். ஆனால் அந்தச் சூழ்நிலை இல்லாதது எமக்கு வேதனையைத் தருகிறது.

— திலீபன்



## மானிப்பாய் சந்தையடி வர்த்தகர்

(B 1417)

## சிந்தனைக்கு

நம் சகப்பிறவிகளுக்கு நாம் செய்யக்கூடிய மிகக் கொடிய துரோகம் அவர்களை வெறுப்பதல்ல அவர்களிடம் அசட்டையாய் இருப்பதே: அதுவே மனிதத் தன்மையற்ற நிலையின் சாரம்.

— ஜார்க் பெர்னாட்ஷா

ஈழநாதம்

31, வைமன்வீதி, யாழ்ப்பாணம். 24-09-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ எண் 05

# விளக்கமின்மையா விருப்பமின்மையா

பருத்தித்துறையில் சிறிலங்கா அரசாங்கம் அனுப்பிய சொற்ப அளவு உணவுப் பொருட்களில் ஒருபகுதி தேங்கிக் கிடப்பதாகவும், அவற்றை ஒதுக்கப்பட்ட சில சங்கங்கள் எடுத்து விநியோகிக்கவில்லை எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மறுவளமாக அகதிமுகாம்களுக்கும், வறிய மக்களுக்குமென ஒதுக்கப்பட்ட உணவுகள் விநியோகிக்கப் படவில்லை எனவும் நிவாரணப் பொருட்கள் பெற மக்கள் அலைவதாகவும், சில சங்கங்களில் அரைகுறையாக உணவுப் பொருட்கள் விநியோகிக்கப்படுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை சண்டை ஆரம்பித்த யூன் மாதம் பத்தாம் திகதிக்குப் பின்னர் வடக்கு கிழக்கிற்குத் தேவையான உணவுப் பொருட்களில் 12 வீதம் மட்டுமே வந்து சேர்ந்துள்ளதாகவும் செய்திகள் குறிப்பிடுகின்றன.

மேலும் களஞ்சியங்களில் உணவுப் பொருட்கள் தேங்கிக் கிடப்பதனால் இனிவரும் கப்பல்களில் இருந்து இறக்கப்படும் பொருட்களுக்கு களஞ்சிய வசதி இல்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு பொருட்கள் தேக்கத்திற்கும், விநியோகிக்கப் படாமைக்கும் அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ள ஊரடங்கும், போக்குவரத்து வசதியின்மையும் தடையாக இருப்பதாக அதற்குப் பொறுப்பாக இருப்பவர்களிடம் இருந்து பதில்கள் வருகின்றன. இதிலும் ஓரளவு உண்மை உண்டாகிலும் ஒருசில அதிகாரிகள் ஊழியரைத் தவிர பெரும்பான்மை அதிகாரிகளும், ஊழியர்களும் துணிந்து நடவடிக்கை எடுக்க விருப்பமின்மையும், பொறுப்பற்ற தன்மையுமே முக்கியமான காரணமாகும்.

தமிழ்ப் பகுதி மீது பொருளாதாரத் தடையை விதித்துள்ள சிறிலங்கா அரசாங்கம் விருப்பத்தின் பேரிலோ தமிழ் மக்கள் மீதுள்ள பற்றுதலாலோ உணவுப் பொருட்களை அனுப்பவில்லை. உலக நாடுகளில் தங்கி வாழும் இச் சிறிலங்கா அரசாங்கம் சர்வதேச அபிப்பிராயங்கள் நெருக்குதல்கள் என்பனவற்றாலேயே இந்தப் பொருட்களை அனுப்புகின்றது.

வடக்கு கிழக்கில் நடைபெறும் யுத்தத்தைக் காரணம் காட்டி பாதிக்கப்பட்ட மக்களுக்கென வெளிநாடுகளில் பெறும் பெருந்தொகையில் ஒரு சிறுதொகையை மட்டுமே இங்கு அனுப்புவதோடு. பெருந்தொகையை அனுப்புவதாகப் பொய்ப்பிரசாரமும் செய்கின்றது.

சிறிலங்கா அரசாங்கம் திறந்த மனத்துடன் விருப்பத்தின் பேரில் அனுப்புவதாக இருந்தால் அர்த்தமேயற்ற ஊரடங்குவேளையில், சிறிய 'தோணிகளில்' இவ் உணவுப் பொருட்களை அனுப்பவேண்டிய அவசியமில்லை.

இன்றைய நிலையில் சிறிலங்கா அரசாங்கம் வடக்கு கிழக்கில் அரச நிர்வாகம் நிகழ்வதையோ, மக்கள் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதையோ விரும்பவில்லை இதனால்தான் போலியான ஊரடங்கைப் பிறப்பித்து சகல நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்த விரும்புகின்றது. நெருக்குதலுக்காக உணவை அனுப்பிவிட்டு விநியோகத்தைக் கட்டுப்படுத்தப் பார்க்கின்றது.

இந்நிலையில் இங்குள்ள அரச அதிகாரிகளும் ஊழியர்களும் அரசாங்கத்தின் அழித்தொழிக்கும் நடவடிக்கைகளைக் காரணம் காட்டி தமது கடமைகளைத் தட்டிக்கழிப்பது ஏற்கக்கூடிய நடத்தையல்ல.

தமிழ் ஊழியர்கள் தொடர்ந்தும் இவ்வாறே நடந்துகொள்வார்களேயானால் இவர்களும் சிறிலங்கா அரசாங்கத்தின் ஒடுக்குமுறைக்கு மறைமுகமாக ஒத்துப்போகின்றவர்களாகவே கருதப்படவேண்டியிருக்கும்.

# அசிட் அருந்தி மரணம்

(வவுனியா)

வறுமையின் கொடுமை தாங்கமுடியாமல் தனது நான்கு குழந்தைகளுக்கும் அசிட்டை ஊட்டி, தானும் அதை உட்கொண்டு இளந் தாய் ஒருவர் தற்கொலை செய்து கொண்டார்.

வவுனியா தெற்கிலுப்பைக் குளம் பகுதியில் இப் பரிதாப கரமான சம்பவம் நிகழ்ந்தது.

தனது கணவரும் உறவினர்களும் இராணுவ நடவடிக்கைகளுக்கு அஞ்சி இடம்பெயர்ந்து சென்றுவிட்டநிலையில், தனது நான்கு குழந்தைகளுக்கு அசிட்டைஊட்டிவிட்டுதானும் அதை உட்கொண்டார். இதில் ஏழு வயது நிரம்பிய ஆண்குழந்தை மட்டும் உயிர் தப்பியது. ஐந்து வயதுக்கு கீழ்ப்பட்ட மூன்று குழந்தைகளும் சிவச்சந்திரன் ருக்மணி தேவி (26) என்ற இளந் தாயும் உடன் இறந்தனர்.

சவுதி அரேபியாவில் இருந்து

# ஜோர்டான், ஈராக், யேமன் தூதுவர்கள் வெளியேற்றப்பட்டனர்

(ரியால்)

சவூதிஅரேபியாவின்பந்தோபஸ்துக்குக் குந்தகம் விளைவிக்கும் விதத்திலும் ராஜதந்திர செயற்பாடுகளுக்கு முரண்பாடான வகையிலும் நடந்து கொள்வதாகக் காரணம் காட்டி ஈராக், யேமன், ஜோர்டான் ஆகிய நாடுகளின் ராஜதந்திரிகளை சவூதியை விட்டு உடனடியாக வெளியேறும் படி பணிக்கப் பட்டுள்ளது.

இதற்கிடையில் குவைத்தைச் சுற்றிலுமுள்ள ஈராக்கியபடைகள் அமெரிக்கத் துருப்புக்களைத் தாக்கியுள்ளதாக அமெரிக்கவட்டாரங்கள் தெரிவித்தன.

அமெரிக்காவும் நேசநாடுகளும் தமது துருப்புக்களை மேலும் அதிகரித்துள்ளன.

வளைகுடாவில் மொத்தம் உள்ள, 3 லட்சத்து 60 ஆயிரம் அமெரிக்கத் துருப்புக்களில் 1 லட்சத்து 15 ஆயிரம் சவூதி அரேபியாவில் மாத்திரம் நிலை கொண்டுள்ளன. என்பது குறிப்பிடத் தக்கது.

# லைபீரிய கிளர்ச்சித் தலைவர் ஒருதலைப் பட்ச போர் ஓய்வு

(லண்டன்)

லைபீரியாவில் ஒரு தரப்புப் போர் நிறுத்தம் ஒன்றினை ஏற்படுத்தவுள்ளதாகஅந்நாட்டின் கிளர்ச்சித் தலைவர் சாஸ் டெய்லர் அறிவித்துள்ளார். இது தொடர்பாக மன்றோவியாவிலிருந்து 125கி மீ. தொலைவில் அமைந்துள்ள ஓர் இடத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் தெரிவித்தார். போர் நிறுத்தம்பற்றிப் பேச்சுநிகழ்த்தப்படுமென்றும், இதில் பங்கு பற்றும் அனைவரும் போர் நிறுத்தத்தை சரிவரப் பயன் படுத்த வேண்டுமென்றும் இவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இப்பேச்சுக்களில் நாட்டின் எதிர்காலம் பற்றியும் ஆராயப்படவுள்ளது. இதில் சம்பந்தப்படும் ஏனைய பிரிவினர் இளவரசர் ஜோன்சனிடமிருந்து பிரிந்து சென்ற குழுவினரும் 3000 உறுப்பினர்களைக் கொண்ட மேற்கு ஆபிரிக்கப் படையினருமாவார். இப்போர் நிறுத்தமானது இன்று நண்பகலுடன் அமுலுக்கு வர உள்ளதாக அறியப் படுகிறது.

ராமஜென்ம பூமி பாபர் மசூதி பிரச்சினை

# நீதிமன்றத் தீர்ப்பை அரசு பற்றி நிற்கும் - வி. பி. சிங்

(சென்னை)

ராமஜென்மபூமி பாபர் மசூதிப் பிரச்சினையில் அனைத்து இன மக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஏற்புடைய தீர்வொன்று காணப்படும் என இந்தியப் பிரதமர் நேற்று முன்தினம் சென்னையில் தெரிவித்தார்.

இவ் விடயம் தொடர்பாக மேலும் கருத்து வெளியிட்ட வி. பி சிங் அனைத்து மதத்தினருடனும் இது தொடர்பாக தீர்க்கமாக ஆராயப் படும் என்றும், ஆனால் நீதிமன்றத் தீர்ப்பை அரசாங்கம் பற்றி நிற்கும் எனவும் தெரிவித்தார்.

# வளர்முக நாடுகளின் நிதி அமைச்சர்கள் மாநாடு

(வாஷிங்டன்)

வாஷிங்டனில் 24 வளர்முக நாடுகளின் நிதியமைச்சர்கள் மாநாடு நடந்தது. இதில் வளைகுடா நெருக்கடி காரணமாக ஏற்பட்டுள்ள எரிபொருள் விலையேற்றத்தினால் பாதிக்கப்பட்டுள்ள வளர்முக நாடுகளுக்கு செல்வந்த நாடுகள் உதவ வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப் பட்டது. கிட்டத்தட்ட 60 வளர்முகநாடுகளின்பொருளாதாரம் இப்பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ளது

இம்மாநாட்டில் உலகவங்கி சர்வதேச நாணய நிதி போன்ற அமைப்புகள் வளர்முக நாடுகளுக்கான உதவிகளை அதிகரிக்க வேண்டும் எனக்கேட்டுக்கொள்ளப்பட்ட போது, அந்நிறுவனங்கள் உதவிகளை அதிகரிக்க வாய்ப்பில்லையெனினும் ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்ட நீண்ட காலக் கடன் வசதிகளைத் துரிதமாக வழங்க முடியும் எனத் தெரிவித்தன.

# இந்தியாவில் வேலையற்றோர் மூன்று கோடி முப்பது லட்சம்

(சென்னை)

இந்தியாவில் தற்பொழுது வேலையற்றிருப்பவர்கள் தொகை மூன்று கோடியே முப்பது லட்சம் பேர் எனவும் அதில் ஒரு கோடியே நாற்பது லட்சம் பேர் படித்த வாலிபர்கள் எனவும் இந்தியப் பிரதம மந்திரி வி. பி. சிங் தெரிவித்துள்ளார்.

## இடமாற்றம்

கிளிநொச்சி நீர்ப்பாசனப் பொறியியலாளர் பணிமனை இம் மாதம் 26 ஆம் திகதி முதல் தற்காலிமாக இரணைமடுக்குளம் தலைமைவேலைத் தளத்தில் இயங்கும் எனவும் சகல அலுவலக வெளிக்கள ஊழியர்களையும் இத் திகதியில் இரணைமடுக்குளத் தலைமையகத்துக்குச் சமுகம் தரும் படியும் கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனப்பொறியியலாளர் என் ஜே நவரட்ண ராஜா கேட்டுக் கொண்டுள்ளார்.

## வாகனங்கள் மீது எரிகுண்டு

(கொழும்புத்துறை)

தனங்கிளப்புப் பகுதியை வட்டமிட்ட மூன்று பொம்மர்கள் கடந்தவியாழக்கிழமை காலை இப்பகுதியில் சென்று கொண்டிருந்த வாகனங்கள மீது எரிகுண்டுகளைப் போட்டன.

இக்குண்டுவீச்சினால் யாழ்ப்பாணததிலிருந்துவெங்காயம், சுருட்டு, பீற்றூட் ஆகிய பொருட்களை ஏற்றிக் கொண்டு சென்ற லொறி பலத்த தாக்குதலுக்குள்ளாகி எரிந்த நிலையில் உள்ளது. (24)

## சிறுவர் சர்வதேச மாநாடு

(வாஷிங்டன்)

ஐ. நா. சபையில் எதிர்வரும் 29 ஆம், 30 ஆம் திகதிகளில் சிறுவர்களுக்கான சர்வதேச மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டில் இன்று உலகில் சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி ஆராயப்பட உள்ளது.

## சேதம்பற்றி அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

முறைசாராக்கல்வி (யூ என். ஈச் சி. ஆர்) தொழிற் திறன் பயிற்சித் திட்டத்திற்கென வழங்கப்பட்ட கருவி உபகரணங்கள், தொழிற் கூடங்கள் போன்றவற்றிக்கு அண்மைக் கால அசம்பாவிதங்களினால் சேதம் எதும் ஏற்பட்டிருப்பின் அது பற்றி விபரமான அறிக்கையொன்றினை எல்லா அதிபர்களும் 27 9 90 திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களம் முறைசாராக்கல்விப் பிரிவுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்படுகின்றனர். இப் பிரிவின் கொள்வனவுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகளின் செலவு விபரத்தையும் உடன் அனுப்பிவைக்குமாறு அதிபர்கள் கேட்சப்படுகின்றனர். இதன் பொருட்டு உரிய போதனாசிரியர்கள் தமது அதிபரைச் சந்தித்து உரிய தகவல்களை வழங்கியுதவும் படியும் கேட்கப்பட்டது

## மூன்று வீடுகள் சேதம்

(ஈச்சமோட்டை)

கொழும்புத்துறையில் உள்ள வளன்புரத்தில் நேற்று முன்திரம் (22-9-90) பி ப. 6-30 மணியளவில் பொம்மர் குண்டு வீச்சு விமானம் பொது மக்கள் வாழும் பகுதிகளை நோக்கி குண்டு வீச்சு தாக்குதல் மேற்கொண்டது. இந்த தாக்குதலால் 3 வீடுகள் பலத்த சேதமடைந்துள்ளன. (43)

## சைக்கிள் திருட்டு

(ஈச்சமோட்டை)

கொழும்புத்துறை மேற்கில் தற்காலிகமாக இயங்கும் 31ஆம் இலக்க பல. நோ. கூ. சங்க கிளை முகாமையாளர் திருநாவுக்கரசுவின் சைக்கிள் களவாடப்பட்டது. இச்சம்பவம் ஒரு சில நாட்களுக்கு முன்பு மேற்படி பல. நோ. கூ. சங்கத்தில் இடம் பெற்றது. (43)

# "திலீபனின் நம்பிக்கையை நிறைவேற்றுவது தமிழீழ மக்களின் பொறுப்பு"

## வவுனியா மாவட்ட வி. பு. மகளிர் அ. பொறுப்பாளர் ரதி

(வவுனியா)

மக்கள் மீது பாசம், நம்பிக்கை தியாகி திலீபனுக்கு உண்டு. அதனால் தான் தனது மரணத்திற்குப் பின்பு 'மக்கள் புரட்சி வெடிக்கும் - தமிழீழம் மலரும்' என்று நம்பினார். திலீபனின் வேண்டுகோளை நிறைவேற்றுவது தமிழீழ மக்கள் அனைவரினதும் பொறுப்பு.

வவுனியா சாஸ்திரி கூழாங்குளம் பாடசாலை மண்டபத்தில் கடந்த 17 ஆம் திகதி நடைபெற்ற தியாகி திலீபனின் மூன்றாம் ஆண்டு நனைவுதினக் கூட்டத்தில் பேசும் போது வவுனியா மாவட்ட விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பின் பொறுப்பாளர் செல்வி ரதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது,

தியாகி திலீபன் ஆரம்ப காலத்திலேயே மக்களுடன் தன்னைப் பிணைத்துக் கொண்டவர். அவர் ஐந்தம்சக் கோரிக்கையினை முன்வைத்து உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டபோது அவரது கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டன.

புகழ்மாலையை எதிர்பார்த்து திலீபன் உண்ணாவிரதத்தில் ஈடுபடவில்லை. ஒரு மக்கள் புரட்சி வெடித்து அதன் மூலம் தமிழீழம் மலரும் என்ற நோக்கிலேயே திலீபன் மரணத்தைத் தழுவினார்.

களத்தில் மரணிக்கும் போராளிகளின் கரங்களிலிருந்து நழுவும் ஆயுதங்களை ஏந்தவேண்டியது தமிழீழ மக்கள் அனைவரினதும் பொறுப்பாகும்.

விடுதலைப்புலிகள் வானத்திலிருந்துகுதித்தவர்களல்லர். அவர்கள் உங்களின் பிள்ளைகள்.

அகதிமுகாம்களுக்கும் இந்தியாவுக்கும் மக்கள் ஓடிவிட்டால் புலிகள் மட்டுமே மண்ணில் மிஞ்சுவார்கள். மக்கள் இல்லாத நாடுதேவையில்லை. மக்கள் பலம் இல்லாது எந்தவொரு விடுதலைப் போராட்டங்களும் வெற்றி பெற்றது கிடையாது என்றார்.

வவுனியா மாவட்ட விடுதலைப்புலிகளின் மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் திரு. ராம் அங்கு உரை நிகழ்த்தும்போது,

வைத்தியராக உருவாகக்கூடிய சந்தர்ப்பம் இருந்தும் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக திலீபன் போராட்டத்தில் இணைந்து கொண்டார்.

அரசபடையினர் மீது சிறுசிறு தாக்குதல்களைத் தொடுத்துக் கொண்டிருந்த நாம் இன்று நேரடித் தாக்குதல் செய்யும் அளவுக்குவளர்ச்சியடைந்து விட்டோம்.

விடுதலைப்புலிகளுக்கு எதிராக மட்டும் அரச படையினர் தாக்குதல் மேற்கொள்ளவில்லை. அனைத்து தமிழ் பேசும் மக்களுக்கு எதிராகவும் அரச படையினர் தாக்குதல் செய்கிறார்கள்.

இந்த நிலையில் பலர் விடுதலைப் போராட்டத்தில் இணையாமல் இருப்பது கோழைத்தனமானது என்றார். (தி)

## ஊர்வலமும் கூட்டமும்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நல்லூர் தெற்கு சிற்றூரவையின் ஆதரவில் திலீபனின் 3ஆவது நினைவு நாள் நல்லூர் சாதனா பாடசாலை மண்டபத்தில் இன்று மாலை 3 மணியளவில் நடைபெறவுள்ளது.

தொடர்ந்தாற்போல் மாலை 6 மணியளவில் திலீபனின் நினைவஞ்சலிக் கூட்டம் நடைபெறும். விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் சிரேஷ்டஉறுப்பினர்கள் நினைவுரைகள் நிகழ்த்துவார்கள். கவிதாஞ்சலியும் இடம் பெறும்.

மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 8-30 முதல் மாலை 4-30 மணிவரை அடையாள உண்ணாவிரதம் இடம் பெறும்.

## செட்டிகுள காரியாலயம் செயற்படுகிறது

வவுனியா தெற்கு தமிழ்ப் பிரிவு அரசாங்க அதிபர் காரியாலயம் செயல்படத் தொடங்கியுள்ளது.

இப்பிரிவின் உதவி அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா அற்புதராஜா உட்பட சில அதிகாரிகள் மட்டுமே செயல்படும் மேற்படி காரியாலயத்தில் பணி புரிகின்றனர்.

இக் காரியாலயம் கடந்த ஜூன் மாதம் ஸ்ரீ லங்கா இராணுவப் படையினரால் உடைக்சப்பட்டு அங்கிருந்த ஆவணங்களும் வேறு பொருட்களும் திருடப்பட்டிருப்பது தெரிந்ததே. (தி)

### தண்ணீர்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நகரப்பகுதி வீடுகளில் தங்கியுள்ள தமிழ்மக்களின் மீது நம்பிக்கை அற்ற காரணத்தினால் கிணற்றுத் தண்ணீரில் மாற்றங்கள் தென்படுவதாக எண்ணப்படும் சமயங்களில், வீட்டு உரிமையாளர்களை அழைத்து வந்துதண்ணீரைக் குடிக்கவைத்து, இராணுவத்தினர் தண்ணீரைப் பரிசோதனை செய்கின்றனர்.

அண்மையில் வவுனியா யாழ். வீதி பகுதியில் வீட்டுக் கிணற்று நீரை தமிழ் பெண்மணி ஒருவரைக் குடிக்கவைத்து, இராணுவத்தினர் பரிசோதனை செய்தனர். (தி)

### பூந்தோட்டம்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா நகரப் பகுதியில் பொதுச்சந்தை ஒன்று அமைக்கப்பட்டுள்ள போதிலும் இராணுவத்தின் தாக்குதல் நடவடிக்கைகளுக்கு அஞ்சித் தமிழ் மக்களில் அதிகம்பேர் அச்சந்தைக்குச் செல்வதில்லை.

சில வியாபாரிகள் மட்டும் நகரப்பகுதி சென்று பொருட்களைக் கொள்வனவு செய்து வந்து பூந்தோட்டம் சந்தையில் வைத்து விற்பனை செய்து வருகின்றனர். இதைத் தடை செய்யும் நோக்குடனேயே பிரிகேடியரால் மேற்படி தெரிவிக்கப்பட்டது.

இதை அடுத்துப் பூந்தோட்டம் சந்தை செல்லும் மக்கள் மத்தியில் பீதிநிலை ஏற்பட்டுள்ளது. (தி)

## பெற்றுக் கொள்ளவும்

சிவகுருகோமதி-தொல்புரம் செல்லத்துரை கணேசலிங்கம் வவுனிக்குளம், கந்தஞானியார் அருணகிரியர் அராலி தெற்கு ஆகியோரின்தேசிய அடையாள அட்டை பூநகரி தபால் அதிபரிடம் உள்ளன. உரியவர் பெற்றுக் கொள்ளவும்.

### ராஜீவ்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் அவர் தனது பயணத்தின் நோக்கம் வர்த்தகம் மாத்திரமே என பத்திரிகையில் வெளியான செய்தியையும் மறுத்தார்.

சிறிலங்கா பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னாவும், ஐ. கே.குஜ்ராலின் விஜயம் வர்த்தகம் சம்பந்தமானது எனத் தெரிவித்திருந்தது தெரிந்ததே.

மேலும் செய்தியாளருக்கு கருத்துவெளியிட்ட குஜ்ரால் அண்மையில் ரஞ்சன் விஜேரட்னாவை தாம் சந்தித்த போது சில காலமாகச்செயற்படாமலிருந்த பொருளாதாரக் குழுவை மீண்டும் தொடங்குவதுபற்றி ஆலோசிக்கப்பட்டதாகவும், இப் பேச்சுவார்த்தையின்அடிப்படையிலேயே தமது பயணத்திற்கான வழிமுறைகள் வகுக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

மேலும் இலங்கையில் அகதி முகாம்களை அமைப்பது தொடர்பாகஉதவிட இந்தியா சர்வதேச அமைப்புக்களை நாடியுள்ளதாகவும், இந்த முகாம்களை அமைப்பதற்கு இலங்கை அரசாங்கமும், போராளிக்குழுக்களும் தமக்கு உதவும் எனத் தாம் நம்புவதாகவும் தெரிவித்தார்.

### நேற்றைய

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தன. இச்சம்பவத்தில் எவருக்கும் உயிர்ச்சேதமோ, காயங்களோ ஏற்படவில்லை. நீராவியடி சனசமூக நிலையத்திற்கு அண்மையில் நடந்த தாக்குதலில் மூன்று வீடுகள் பலத்த சேதமடைந்ததுடன், சௌந்தரராஜன் (வயது 21) என்பவர் காயமடைந்தார். கஸ்தூரியார் வீதிப்பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் 5 வீடுகள் பலத்தசேதமடைந்ததுடன், தேவராசா (வயது36 நேசன் (வயது 26) தவராஜ் (வயது 27) என்பவர்கள் பலத்த காயமடைந்துள்ளனர். இவர்கள் மானிப்பாய் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (க)

### செஞ்சிலுவையின்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றியது போல் சர்வதேசசெஞ்சிலுவைச்சங்கத்தையும் உலகையும் ஏமாற்றி வருகின்றது.

உலகை ஏமாற்ற மனிதாபிமான அடிப்படையில் தாம் நடப்பதாகவும் அதை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கூடாகவும் செய்வதாகக் கூறுகின்றது.

மறு புறத்தில் மறைமுகமாக தான் பகிரங்கமாக சொன்னவற்றை செய்யாமல் விடுகிறது அல்லது தடுக்கின்றது.

யாழ். குடாநாட்டிற்குபெருமளவு உணவுப் பொருட்கள் அனுப்பப்படுவதாகசிறிலங்கா கூறுகின்றது. ஆனால் இந்த90 நாளிலும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக அனுப்பப்பட்ட அரிசி 1,133 மெற்றிக்தொன், மா 804மெற்றிக்தொன், சீனி 568 மெற்றிக் தொன் ஆனால் 90 நாட்களுக்கு யாழ். குடாநாட்டிற்குத் தேவையான உணவுப்பொருட்கள் அரிசி 24.500 மெற்றிக் தொன், மா 12,250 மெற்றிக் தொன், சீனி 4,900 மெற்றிக் தொன் வந்த உணவு 7நாட்களுக்குக்கூடப் போதாதவை. இவை அனுப்பப்படும்போதும் பல தடவைகளில் இவைகளை விநியோகிக்க எரிபொருள் அனுப்பப்படுவதில்லை.

ஒருமுறை வந்த உணவுக்கப்பல் (22.08.1990) போர் நடவடிக்கை என்ற பெயரில் திருப்பி அனுப்பப்பட்டது.

*காலைவரையறையற்ற ஊரடங்கு*

அதேவேளைகாலவரையறையின்றி போடப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டம் மூலம் உணவு விநியோகம் நடைபெறுவதில்லை. வைத்தியசாலைகள் இயங்க போதிய எரிபொருள் அனுப்பபடுதில்லை. அனுப்பபடும் எரிபொருளை அரைவாசிக்குமேல் திரும்பஎடுத்துச் செல்லப்படும் நிலை தொடர்கின்றது. யாழ். குடா நாட்டுக்கு 16-07-1990 அன்றில் இருந்து மின்சாரம் கிடையாது. மின்சாரம் வழங்கும் மின்கம்பங்களை கிளிநொச்சியில்செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் திருத்த சிறிலங்கா அனுமதி வழங்கியது, அதேவேளை சுன்னாக மின்சார நிலையத்தை நான்கு முறை குண்டு வீசி அழித்து மின்சாரம் குடா நாட்டுக்கு வராமல் செய்தது.

*பொய்ப் பிரசாரம்*

சிறிலங்கா யாழ்.கோட்டையில் காயமடைந்த நிலையில் நான்கு படைவீரரை சிகிச்சைக்காக கோட்டையில் இருந்து அகற்ற சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை நாடிய போது (20-07-1990) நாம் இணங்கினோம்.

யாழ். கோட்டையிலிருந்து படைவீரர்களை முழுமையாக அகற்ற விரும்பியபோது நாம் இணங்கினோம்.ஆனால் காயமடைந்த படையினரை நாம் அகற்ற இணங்கவில்லை என சிறிலங்காப்படை குற்றம் சாட்டியது.

*செஞ்சிலுவை மீது சூடு*

பலாலி சிறிலங்கா படை முகாமுக்கு சென்ற (4.7 90) செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதியின் வாகனத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. அவர் மயிரிழையில் உயிர் தப்பினார். அவரைக் காப்பாற்றும் முயற்சியில் எமது போராளிகள் மூவர் காயமடைந்தனர்.

ஆனையிறவுஊடாக உணவு எடுக்கச்சென்ற செஞ்சிலுவை பிரதிநிதிகள்மீது எறிகணைத் தாக்குதல் (17,07.1990) நடத்தியது. அவர்கள் உணவுப் பொருட்களுடன் திரும்பி வரும்போது அந்த வாகனத் தொடரை கேடயமாக பயன்படுத்திக்கொண்டு சிறிலங்காப்படை முன்னேற முயன்றது.

*செஞ்சிலுவைக்கு அனுமதியில்லை*

10இலட்சம் தமிழ் மக்கள் வாழும் யாழ்.குடாநாட்டிற்கு கடந்த 90 நாட்கள் வரை கொண்டுவரப்பட்ட உணவுப் பொருட்கள் 7 நாட்களுக்கு மட்டுமே போதுமானது. 22-08-1990 அன்று தீவுப்பகுதியில் சிறிலங்காப் படையின் தாக்குதலைத் தொடர்ந்து 400க்கும் மேற்பட்ட பொது மக்கள் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர். 22-08-1990இல் இருந்து 10 - 09 - 1990 வரை செஞ்சிலுவைச்சங்க உறுப்பினர் அங்கு செல்ல சிறிலங்காவால்அனுமதிக்க படவில்லை. அதேவேளை 10 – 09 - 1990 அன்று அனுமதிக்கப்பட்ட போதும் உணவு எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படவில்லை. கிழக்கு மாகாணத்தில் 04 இலட்சத்திற்கு மேற்பட்ட தமிழ் மக்கள் வாழ்கின்றார்கள். அங்கு 3000 க்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். பல ஆயிரக் கணக்கானோர் காயமடைந்துள்ளனர். 30 க்கும் மேற்பட்ட குழந்தைகளும் 100க்கு மேற்பட்ட தமிழ் மக்களும்பட்டினியால்இறந்துள்ளனர். உதாரணமாக திருகோணமலையில்உள்ள பாட்டாளிபுரம், வீரமாநகர், இழுக்கந்தை ஆகிய கிராமங்களைக் குறிப்பிடலாம். இப்படிப் பல கிராமங்கள்.

*செஞ்சிலுவையால் உதவ முடியவில்லை*

இதுவரை இப்பகுதி எங்காவதுசெஞ்சிலுவைச்சங்க உறுப்பினர்கள் சென்றது கிடையாது. இவர்கள் முன்னிலையில் தமிழீழத்தில் 19-07-1990 இல் இருந்து சிறிலங்கா எரிகுண்டுகளை பொதுமக்கள் வாழும் பகுதிகளில் வீசி வருகின்றது. வைத்தியசாலைகளை தாக்கி அழிக்கின்றது. இவர்கள் வாகனங்கள்மீது தாக்குதல் நடாத்துகின்றது. தமிழீழத்தில் இதுவரை போராட்டத்தால் காயமடைந்த மக்களுக்கு சிறிலங்காவால் திட்டமிட்டு பட்டினி போடப்படும் மக்களுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தால் உதவ முடியவில்லை.

*செஞ்சிலுவை மதிப்புக் குறைந்துள்ளது*

யாழ். குடாநாட்டில் சிறிலங்காவின் இராணுவ கெடுபிடிகள் அற்ற பிரதேசத்தில் தான் அவர்களால் செயலாற்ற முடிகிறது. அதுவும் குறிப்பிட்டு சொல்லும் அளவுக்கு இல்லை என்பதுதான் தமிழீழ மக்களின் கருத்து. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மீது தமிழ் மக்கள் வைத்திருந்த மதிப்பு பெருமளவில் குறைந்துள்ளது. தன்னையே பாதுகாக்க முடியாத ஓர் அமைப்பு கஷ்டப்பட்ட பகுதிகளுக்குச் சென்று உதவும் என மக்கள் நம்ப ஆயத்தமாக இல்லை.

*செஞ்சிலுவை பகிரங்கப்படுத்த வேண்டும்*

எம்மைப் பொறுத்தவரை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் சரியான முறையில் செயற்பட முடியாமல் சிறிலங்காதடை செய்து வருவதையும் தனது பொய்ப் பிரசாரத்திற்காக இவ்வமைப்பை பயன்படுத்துவதையும் இவ்வமைப்பு பகிரங்கப்படுத்த வேண்டும் என விரும்புகிறோம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### *வீரவணக்கம்*

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ப்பைச்சேர்ந்த இவர் இராணுவத்தினருடனான பல முக்கிய தாக்குதல்களில் பங்குபற்றியவர். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.(க)

### எரிபொருள்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விவசாயிகள் ஆர்வமின்றிக் காணப்படுகின்றனர்.

டீசல் இல்லாத காரணத்தினால் உழவுயந்திரங்கள் இயங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது,

இது பற்றி இராணுவ பிரிகேடியரிடம் பிரஜைகள் குழுவினர்கள்கேட்டபோது, டீசல் விநியோகம் செய்வதற்கு மேல் மட்டத்தின் அனுமதி கிடைக்க வேண்டும். மண்ணெண்ணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் விற்பனை செய்வதற்கு எதுவித தடையுமில்லை என்று வன்னிப் பகுதி இராணுவ தலைமையகத்தின் பிரிகேடியர் சத்தீஸ் ஜெயசுந்தர தெரிவித்தார். (தி)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1990 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது